


09.07.2024

தலைப்புச் செய்திகள்

1. உலக அளவில் 3ஆவது பொருளாதார நாடாக இந்தியாவை மேம்படுத்துவதே மத்திய அரசின் இலக்கு என்று பிரதமர் திரு.நரேந்திரமோடி தெரிவித்துள்ளார்.

2. சமையல் எரிவாயு நுகர்வோரின் நம்பக தன்மையை உறுதிசெய்யும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதாக மத்திய அமைச்சர் திரு. ஹர்தீப்சிங் பூரி கூறியுள்ளார்.

3. தமிழ்நாட்டின் சட்டம் ஒழுங்கு நிலைமை தொடர்பான ஆலோசனைக்கூட்டம் முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் தலைமையில் சென்னையில் இன்று நடைபெற்றது.

3. சிப்காட் தொழிற்சாலைகளின் மூலம் இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பு அதிகரிக்கும் என்று மாநில தொழில்துறை அமைச்சர் திரு.டி.ஆர்.பி.ராஜா தெரிவித்துள்ளார்.

5. இந்திய - தென்னாப்பிரிக்க மகளிர் அணிகளுக்கு இடையேயான 3-வது இறுதி 20-20 கிரிக்கெட் போட்டி சென்னையில் இன்று இரவு 7 மணிக்கு நடைபெறுகிறது.

இனி விரிவான செய்திகள்

ழுழுழுழுழுழுழுழுழுழு

பிரதமர்

உலக அளவில் 3ஆவது பொருளாதார நாடாக இந்தியாவை தமது 3ஆம் ஆட்சி காலத்தில் மேம்படுத்துவதே மத்திய அரசின் இலக்கு என்று பிரதமர் திரு.நரேந்திரமோடி தெரிவித்துள்ளார்.

மாஸ்கோவில் இந்திய சமூகத்தினரிடையே இன்று உரையாற்றிய பிரதமர் நம் நாடு தற்போது எந்த இலக்கை நிர்ணயித்தாலும் அதை எட்டி சாதனைப்படைப்பதாக பெருமிதம் தெரிவித்தார்.

தற்போதைய ஆட்சியில் மும்மடங்கு கடின வேகத்துடனும், வலுவுடனும் பணியாற்ற தாம் உறுதிபூண்டிருப்பதாக குறிப்பிட்டார்.

டிஜிட்டல் பணபரிவர்த்தனை தொடர்பான நம்பகதன்மையான மாதிரியை, இந்தியா உலகிற்கு வழங்கியுள்ளதாக கூறிய அவர் சமூகவள பிரிவின் சிறந்த கொள்கைகளால் இந்திய அரசு, குடிமக்களுக்கு ஆளுமை வழங்கி வருவதாகவும் எடுத்துரைத்தார்.

கடந்த 10 ஆண்டுகளில் இந்தியாவின் வளர்ச்சியின் வேகத்தை உலகமே வியப்புடன் நோக்குவதாக கூறிய அவர் இந்தியாவில் பெரிய அளவிலான மாற்றங்கள் ஏற்பட்டுள்ளதாக உலக மக்கள் தெரிவிப்பதை சுட்டிக்காட்டினார்.

அரசின் ஆட்சி முறை, கட்டமைப்பில் மட்டுமல்லாமல் இளைஞர்கள் மற்றும் குடிமக்களின் தன்னம்பிக்கையிலும் மிகப்பெரிய மாற்றங்கள் ஏற்பட்டிருப்பதாக பிரதமர் எடுத்துரைத்தார்.

சர்வதேச வளத்திற்கான புதிய சக்தியை இந்திய ரஷ்ய நாடுகள் இணைந்து வழங்கும் என்று கூறிய பிரதமர், இருநாடுகளுக்கிடையிலான உறவை வலுப்படுத்த அதிபர் விளாடிமிர் புட்டின் தலைமையிலான அரசின் நடவடிக்கைகளை பாராட்டினார்.

ழுழுழுழுழுழுழுழுழுழு

**ஹர்தீப் சிங் பூரி**

சமையல் எரிவாயு நுகர்வோரின் நம்பக தன்மையை உறுதிசெய்ய மு.லு.ஊ ஆதார் சான்றை கட்டாயமாக்க எண்ணெய் நிறுவனங்கள் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதாக மத்திய பெட்ரோலியம் இயற்கை எரிவாயுத்துறை அமைச்சர் திரு. ஹர்தீப்சிங் பூரி தெரிவித்திருக்கிறார்.

இதன்மூலம் போலி நுகர்வோர் சமையல் எரிவாயுவை முறைகேடாக பதிவு செய்யும் முறை களையப்படுவதாக குறிப்பிட்டார்.

கடந்த 8 மாதங்களாக இது நடைமுறையில் இருப்பதாகவும் அவர் கூறினார்.

சமையல் எரிவாயு விநியோகத்தின்போது எண்ணெய் நிறுவன ஊழியர்கள், நுகர்வோரின் தகவல்களை மொபைல் செயலி மூலம் சரிபார்ப்பதாகவும், இதற்காக முவீ நடைமுறை பின்பற்றப்படுவதாகவும் அவர் கூறினார்.

டீபு விநியோக மையங்களிலும் எந்த முறைகேடுகளும் நடைபெறவில்லை என்று தெளிவுபடுத்திய அமைச்சர் எண்ணெய் நிறுவனங்கள் நுகர்வோரின் வசதிக்காக இதுதொடர்பான விளக்க உரையை வெளியிட்டு வருவதாகவும், கூறினார்.

ழுழுழுழுழுழுழுழுழுழு

**கத்துவா -துப்பாக்கி சூடு**

ஜம்மு காஷ்மீர் கத்துவாவில் ராணுவ ரோந்து வாகனங்கள் மீது பயங்கரவாதிகள் துப்பாக்கி சூடு நடத்தியதில் 5 பாதுகாப்பு படை வீரர்கள் உயிரிழந்ததை அடுத்து அப்பகுதிகளில் தீவிர தேடுதல் வேட்டை நடைபெறுகிறது.

இதனிடையே இந்த தாக்குதலுக்கு கண்டனம் தெரிவித்துள்ள குடியரசுத்தலைவர் திருமதி திரௌபதி முர்மு பயங்கரவாதிகளின் இச்செயல் கோழைத்தனமானது என்றும் தீவிரவாதிகளுக்கு தக்க பதிலடி தேவை என்றும் கூறியுள்ளார்.

உயிர்தியாகம் செய்த வீரர்களின் குடும்பங்களுக்கு இரங்கல் தெரிவித்துள்ள அவர் காயமடைந்தோர் விரைவில் குணமடைய வேண்டுவதாக கூறினார்.

இந்த கடினமான நேரத்தில் உயிரிழந்த வீரர்களின் குடும்பத்தினருடன் ராணுவம் துணை நிற்பதாக பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு.ராஜ்நாத்சிங் கூறியுள்ளார்.

அந்தப்பகுதியில் அமைதியையும், சட்ட ஒழுங்கையும் நிலைநாட்ட இந்திய பாதுகாப்பு படையினர் உறுதியுடன் இருப்பதாக அவர் கூறினார்.

இந்த தாக்குதலில் காயமடைந்தவர்கள் விரைவில் குணமடைய பிரார்த்திப்பதாக அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

ஶஶஶஶஶஶஶஶஶஶ

**துப்பாக்கிசூடு**

ஜம்மு காஷ்மீரின் பூஞ்ச் மாவட்டத்தில் இந்திய எல்லைக்கட்டுப்பாட்டு கோட்டின் மீது நேற்றிரவு பறந்த பாகிஸ்தானை சேர்ந்த ட்ரோன் விமானத்தை ராணுவ தரப்பினர் துப்பாக்கி சூடு நடத்தினர்.

இந்த விமானம் நேற்றிரவு இந்திய எல்லைபகுதியில் உள்ள வானில் சிறிது நேரம் வட்டமிட்ட நிலையில் பாதுகாப்பு படையினர் துப்பாக்கியால் சுட்டபோது அந்த விமானம் எல்லைப்பகுதியை விட்டு அகன்று அந்நாட்டிற்கு திரும்பியது.

மீண்டும் இதேபோல் ட்ரோன் விமானம் வானில் பறந்தபோது பதிலடி வழங்கிய ராணுவம் அப்பகுதியில் தேடுதல் வேட்டையை தீவிரபடுத்தியுள்ளது.

இதுதொடர்பாக மக்கள் தகவல் அளிக்க ஜம்மு காஷ்மீர் காவல்துறை கேட்டுக்கொண்டுள்ளது.

ஶஶஶஶஶஶஶஶஶஶ

**நீட்**

இளநிலை மருத்துவ படிப்புகளுக்கான நீட் நுழைவு தேர்வில் கேள்வி தாள் கசிவு குறித்து மத்திய அரசும் தேசிய தேர்வு முகமையும் அறிக்கை ஒன்றை இன்றுமாலை 5 மணிக்குள் சமர்ப்பிக்க உச்சநீதிமன்றம் அறிவுறுத்தியுள்ளது.

மேலும் நீட் முறைகேடுகள் தொடர்பாக இதுவரை மேற்கொள்ளப்பட்டுள்ள விசாரணை தொடர்பான அறிக்கையையும் இன்றுமாலைக்குள் சி.பி.ஐ தாக்கல் செய்ய நீதிமன்றம் கேட்டுக்கொண்டுள்ளது.

நீட் தொடர்பான விசாரணை நேற்று உச்சநீதிமன்றத்தில் நடைபெற்ற நிலையில் நாளை மீண்டும் இதுதொடர்பான விசாரணை எடுத்துக்கொள்ளப்படுகிறது.

ஶஶஶஶஶஶஶஶஶஶ

**தர வரிசை**

தமிழகத்தில் பி.இ., பி.டெக்., உள்ளிட்ட பொறியியல் படிப்புகளுக்கு விண்ணப்பித்த மாணாக்கருக்கான தர வரிசை பட்டியல் சென்னையில் நாளை வெளியிடப்படுகிறது.

இதனைதொடர்ந்து கல்லூரி மற்றும் பாடப்பிரிவை தேர்வு செய்வதற்கான இணையவழி கலந்தாய்வு தொடங்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

ழுழுழுழுழுழுழுழுழுழு

**முதலமைச்சர்**

தமிழ்நாட்டின் சட்டம் ஒழுங்கு நிலைமை தொடர்பான ஆலோசனைக்கூட்டம் முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் தலைமையில் சென்னையில் இன்று நடைபெற்றது.

சென்னை தலைமை செயலகத்தில் நடைபெற்ற இந்த கூட்டத்தில்:

சென்னை மாநகர காவல்துறை ஆணையர் திரு.அருண்,

தலைமை செயலர் திரு.சிவ்தாஸ் மீனா உள்ளிட்ட உயர் அதிகாரிகள் பங்கேற்றனர்.

ழுழுழுழுழுழுழுழுழுழு

**முதலமைச்சர் நூல் வெளியீடு**

முன்னதாக தமிழ்நாட்டில் உள்ள வரலாற்று சிறப்புகள் தொடர்பான ஆராய்ச்சி கட்டுரைகளை உள்ளடக்கிய சுற்றுலா களஞ்சிய நூலினை முதலமைச்சர் இன்று வெளியிட்டார்.

மேலும் பாரம்பரிய வழிபாடு மற்றும் பண்பாட்டு தொடர்பான ஆங்கில நூலையும் முதலமைச்சர் வெளியிட்டார்.

ழுழுழுழுழுழுழுழுழுழு

**டி.ஆர்.பி.ராஜா**

இளைஞர்களுக்கும் மகளிருக்கும் வேலை வாய்ப்பு அளிக்கும் நோக்கத்தில் சிப்காட் நிறுவனங்கள் திருச்சியில் அமைக்கப்பட உள்ளதாக மாநில தொழில்துறை அமைச்சர் திரு.டி.ஆர்.பி.ராஜா தெரிவித்துள்ளார்.

திருச்சியில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், சிப்காட் நிறுவனம் அமைக்க மத்திய அரசின் ர்.யூ.ீ நிறுவனத்திற்கு சொந்தமான இடம் தேர்வு செய்யப்பட்டுள்ளதாகவும், இதற்கான பணிகள் உடனடியாக தொடங்கப்படும் என்றும் குறிப்பிட்டார்.

சிப்காட் தொழிற்சாலை அமைந்தால், டெல்டா மாவட்ட இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பு அதிக அளவில் கிடைக்கும் என்று கூறிய அவர், இப்பகுதியில் அடிப்படை வசதிகள் மேம்படுத்தப்படும் என்றார்.

இப்பகுதியில் புதிய தொழில்நிறுவனங்களை தொடங்குவதற்கான முயற்சிகள் எடுக்கப்பட்டு வருவதாகவும் அவர் கூறினார்.

தமிழ்நாட்டில் தொழில்தொடங்க ஏராளமானோர் முன்வருவதாக கூறிய அவர் இதனால் வேலை வாய்ப்பு பெருகும் என்றார்.

**வாய்ஸ்**

முன்னதாக தஞ்சையில் செய்தியாளர்களிடம் பேசிய அமைச்சர், தஞ்சையில் அமைந்துள்ள தகவல் தொழில்நுட்ப பூங்கா இன்னும் சில வாரங்களில் செயல்பாட்டிற்கு கொண்டுவரப்படும் என்றார்.

ழூழூழூழூழூழூழூழூழூ

**மனோ தங்கராஜ்**

கன்னியாகுமரி மாவட்டம் குலசேகரத்தில் மூன்றரைக் கோடி ரூபாய் மதிப்பில் மைதானம் அமைக்கும் பணிகள் முழு வீச்சில் நடைபெற்று வருவதாக மாநில பால்வளத்துறை அமைச்சர் திரு.மனோ தங்கராஜ் தெரிவித்துள்ளார்.

குலசேகரத்தில் இன்று இப்பணிகளை ஆய்வு செய்த பின் செய்தியாளர்களிடம் பேசிய அவர், இம்மாவட்டம் முட்டம், திற்பரப்பு உள்ளிட்ட பகுதிகளில் சூழல் சுற்றுலாவை மேம்படுத்த குழு அமைக்கப்பட்டு, கருத்துக்கள் சேகரிக்கப்பட்டு வருவதாக கூறினார்.

விரிவான திட்ட அறிக்கைக்கு பின்னர் இதற்கான பணிகள் தொடங்கும் என்றும் அமைச்சர் கூறினார்.

ழூழூழூழூழூழூழூழூழூ

**பட்டாசு விபத்து**

சிவகாசி அருகே காளையார்குறிச்சி பட்டாசு ஆலையில் இன்றுகாலை நேரிட்ட வெடிவிபத்தில் 2 தொழிலாளர்கள் உயிரிழந்தனர்.

படுகாயமடைந்த ஒரு பெண் உட்பட 2 பேர் சிவகாசி அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இந்த நான்கு தொழிலாளர்களும் பட்டாசு தயாரிக்க தேவையான மருந்து கலவையில் ஈடுபட்டிருந்தபோது எதிர்பாரத உராய்வு காரணமாக இந்த விபத்து நடந்ததாக தெரிகிறது.

இந்த சம்பவத்தில் அந்த அறை முழுவதும் தரைமட்டமானது.

இதனிடையே சிவகாசி தீயணைப்பு மீட்பு படையினர் சம்பவ இடத்திற்கு விரைந்து தீ பரவாவன்னம் பாதுகாப்பு நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

காவல்துறையினர் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

ழுழுழுழுழுழுழுழுழுழு

**விக்கிரவாண்டி**

விக்கிரவாண்டி சட்டப்பேரவை தொகுதி இடைத்தேர்தல் வாக்குப்பதிவு நாளை நடைபெறுவதற்கான அனைத்து ஏற்பாடுகளும் தயார்நிலையில் வைக்கப்பட்டுள்ளன.

பாதுகாப்பு பணியில் துணை ராணுவத்தினர் உட்பட மூன்றாயிரம் பேர் ஈடுபட்டுள்ளனர்.

வாக்கு எண்ணிக்கை வரும் 13ஆம் தேதி நடைபெறும்.

ழுழுழுழுழுழுழுழுழுழு

**தூத்துக்குடி – வாய்ஸ்**

தூத்துக்குடி மாவட்டம் திருச்செந்தூர் குரும்பூர் அருகே சோனகன்விளை குளத்தில் நூற்றுக்கணக்கான வெளிநாட்டு பறவைகள் குவிந்துள்ளன.

இதனனை ஏராளமான சுற்றுலாப் பயணிகள் கண்டு களித்து வருவதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

……….. வாய்ஸ் ……………….

ழுழுழுழுழுழுழுழுழுழு

**நாகை வாய்ஸ்**

நாகை மாவட்டத்தில் நடமாடும் மண் பரிசோதனை வாகனங்கள் மூலம் கிராமங்கள் தோறும் முகாம்கள் நடத்தப்பட்டு விவசாயிகளுக்கு மண் வளம் குறித்து விளக்கமளிக்கப்படுவதாக மாவட்ட வேளாண் அலுவலர் திரு.சௌந்தரராஜன் தெரிவித்துள்ளார்.

……….. வாயஸ் ……….

ழுழுழுழுழுழுழுழுழுழு

**போராட்டம்**

ஈரோடு மாவட்டம் கள்ளிப்பட்டியில் வன விலங்குகள் விவசாய பயிர்களை சேதப்படுத்துவதை தடுக்க வலியுறுத்தி 200க்கும் மேற்பட்ட விவசாயிகள் இன்று போராட்டத்தில் ஈடுபட்டனர்.

ழுழுழுழுழுழுழுழுழுழு

**கிரிக்கெட்**

இந்திய - தென்னாப்பிரிக்க மகளிர் அணிகளுக்கு இடையேயான 3-வது இறுதி 20-20 கிரிக்கெட் போட்டி சென்னையில் இன்று இரவு 7 மணிக்கு நடைபெறுகிறது.

மூன்று போட்டிகள் கொண்ட இத்தொடரில் முதல் போட்டியில் தென்னாப்பிரிக்கா வெற்றிபெற்றது.

2 ஆவது போட்டி மழைக்காரணமாக கைவிடப்பட்டது.

ழுழுழுழுழுழுழுழுழுழு

**இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது**

ழுழுழுழுழுழுழுழுழுழு